நீலகிரி மாவட்டத்தில் வீடின்றி ஏங்கிய ஏழை மக்களின் ஏக்கத்தை போற்றும் ஏற்றமிகு திட்டமாம் **"சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் "** கடந்த 9 ஆண்டுகளில் 3971 பயனாளிகளுக்கு ரூ.68.2 கோடி மதிப்பில் பசுமை வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட பயனாளிகள் தமிழக அரசிற்கு நெஞ்சார்ந்த நன்றி

---

மறைந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மிகவும் உன்னதத்திட்டமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் **"சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்"** திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால் சுற்றுசுழல் பாதுக்காக்கப்படுவதுடன், மரபுசாரா எரிசக்தி பயன்பாடு மூலம் மின்சக்தி பெறப்படுகிறது. மேலும் "மழைநீர் சேகரிப்பு"அமைப்பு ஒவ்வொரு வீட்டிலும் அமைக்கப்படும். ஒவ்வொரு பயனாளிகளுக்கும் முழு சுகாதாரத் திட்டத்திலருந்து தனிநபர் கழிப்பிடத் திட்டத்தின் கீழ் கழிவறை கட்டிக்கொள்ள மானியம் வழங்கப்படும். இதனுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தனிநபர் இல்லக்கழிப்பிடம் ரூ. 12,000/- மதிப்பில் அமைத்து தரப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விவாகரத்து பெற்ற பெண்கள்,பெண்கள் தலைமையில் உள்ள குடும்பங்கள், திருநங்கைகள், எய்ட்ஸ் / காசநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், தீ, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள் ஆகியோருக்கு முன்னுரிமையுரிமையும், இத்திட்டத்தின் மூலம் வீடு பெறும் பயனாளிக்கு வேறு எங்கும் கான்கிரீட் வீடு இல்லாதவராகவும், வேறு எங்கும் அரசு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பயன் பெறாதவராகவும் இருக்கும் நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் **"சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்"** திட்டத்தின் கீழ் வீடு கட்டி தரப்படுகிறது.

அதனடிப்படையில், கடந்த 2011-2012 ஆம் ஆண்டில் 545 பயனாளிகளுக்கு ரூ.8.17 கோடி மதிப்பீட்டிலும், 2012-2013ஆம் ஆண்டில் 545 பயனாளிகளுக்கு ரூ.8.17 கோடி மதிப்பீட்டிலும், 2013-2014 ஆம் ஆண்டில் 545 பயனாளிகளுக்கு ரூ.9.81 கோடி மதிப்பீட்டிலும், 2014-2015 ஆம் ஆண்டில் 545 பயனாளிகளுக்கு ரூ.9.81 கோடி மதிப்பீட்டிலும், 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.505 பயனாளிகளுக்கு ரூ.9.09 கோடி மதிப்பீட்டிலும், 2016-2017 ஆம் ஆண்டில்105 பயனாளிகளுக்கு ரூ.1.89 கோடி மதிப்பீட்டிலும், 2018-2019 ஆம் ஆண்டில் 808 பயனாளிகளுக்கு ரூ.14.54 கோடி மதிப்பீட்டிலும், 2019-2020 ஆம் ஆண்டில் 373 பயனாளிகளுக்கு ரூ.6.71 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் கடந்த 9 ஆண்டுகளில் 3971 "சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்" ரூ.68.2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**நீலகிரி மாவட்டத்தில் "சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்" திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள் கூறுகையில்,**

என் பெயர் மாரி. நான் உதகை ஊராட்சி ஒன்றியம் எப்பநாடு ஊராட்சி பகுதியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது ஏழ்மை நிலையை புரிந்து தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முலமைச்சர் அவர்களின் "சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்" வழங்கும் திட்டத்தின் கீழ், எனக்கு வீடு கட்டுவதற்கு அனுமதியளித்து, கான்கீரீட் வீட்டி கட்டிக் கொடுத்துள்ளார்கள். எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. நான் பழைய வீட்டில் இருக்கும்போது மழை காலம் வந்துவிட்டால் எனக்கு மிகவும் பயமாக இருக்கும். இதுவரை பலமுறை மழையின் காரணமாக எங்கள் வீடு சேதம் அடைந்து மீண்டும் அதை சரி செய்திருக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களுக்கு ”சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்” ரூபாய் 2 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் கட்டித் தருவதாக சொன்னதன் அடிப்படையில் நானும் விண்ணப்பம் கொடுத்தேன். எங்களின் பொருளாதார நிலைமையை பரிசீலித்த அலுவலர்கள் உடனடியாக வீடு கட்டுவதற்கு அனுமதியும் வழங்கி, ஒரு அழகான கான்கிரீட் வீட்டையும் தற்போது மறைந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திட்டத்தால் நிறைவேறியுள்ளது. பசுமை வீடு கட்டிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எங்கள் குடும்பமே நன்றிக் கடன்பட்டுள்ளது” என தெரிவித்தார்

எனது பெயர் கங்கை. எனக்கு வயது 43 எனது கணவர் பெயர் முருகேஸ். நாங்கள் உதகை ஊராட்சி ஒன்றியம் எப்பநாடு ஊராட்சி பகுதியில் வசித்து வருகின்றோம். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். இருவரும் பள்ளியில் படித்து வருகின்றனர். எனது கணவர் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இந்த சம்பளத்தை வைத்து தான் எனது வயதான தாய், தந்தையரின் மருத்துவச் செலவு, மகள்களின் படிப்பு செலவு மற்றும் அடிப்படைத் தேவைகள் ஆகியவற்றை சமாளித்து வருகிறோம். என் தாய் தந்தையார் கட்டிய கூரை வீட்டில்தான் இதுவரை குடியிருந்தோம். மழை காலத்தில் வீட்டிற்குள் மழை நீர் தேங்கி வீடு கட்டுவதற்கு நிதி ஆதாரமோ உதவி செய்வதற்கு உற்றார் உறவினர்கள் யாரும் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தோம். கான்கீரிட் வீடு கட்ட வேண்டும். எனது குழந்தைகளின் கனவுகளை நனவாக்க வேண்டும் என்பதே என்னுடைய வாழ்நாள் கனவாக இருந்தது.

இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ. 2.10 இலட்சம் மதிப்பில் அழகான பசுமை வீடுகட்டிக் கொடுத்தார்கள் . மழை காலத்தில் இனி நாங்கள் பயமில்லாமல் சந்தோஷமாக இருக்கலாம். எங்கள் வாழ்நாளில் மெத்தை வீட்டில் குடியிருக்க முடியுமா என்ற ஏக்கத்தை நிறைவேற்றி, நாங்களும் சமுதாயத்தில் நல்லா இருக்கவேண்டும் என்று நினைத்தவர்தான் மறைந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நாங்கள் கஷ்டபடும் பொழுதெல்லாம் என்றாவது ஒருநாள் பலன் கிடைக்கும் என எதிர்பார்த்தேன். அந்த எதிர்பார்ப்பு இன்று ஒரு ரூபாய் செலவு செய்யாமல் கான்கீரிட் வீடு கிடைத்தது ஒரு மிகப்பெரிய வரம் தான். அந்த வரத்தை கொடுத்த கடவுள் மறைந்த மாண்புமிகு அம்மா அவர்கள் தான் மறைந்த மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தார்.

தொகுப்பு
பா.ஜான்ஜெகத் பிரைட்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்